بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 5.12.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 5 Dec 2014 (Tamil)

# கீழ்ப்படிந்து நடத்தல்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சூரா அந்நிஸாவின் 60 வது வசனத்தை ஓதி அதன் பொருளையும் கூறினார்கள்:-

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ أَطِيعُوا۟ ٱللَّهَ وَأَطِيعُوا۟ ٱلرَّسُولَ وَأُو۟لِى ٱلْأَمْرِ مِنكُمْ ۖ فَإِن تَنَـٰزَعْتُمْ فِى شَىْءٍ فَرُدُّوهُ إِلَى ٱللَّهِ وَٱلرَّسُولِ إِن كُنتُمْ تُؤْمِنُونَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْـَٔاخِرِ ۚ ذَٰلِكَ خَيْرٌ وَأَحْسَنُ تَأْوِيلًا

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுக்கு கட்டுப்பட்டு நடங்கள். மேலும் தன்னுடைய ஆட்சியாளர்களுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். மேலும் நீங்கள் ஏதாவதொரு விஷயத்தில் ஆட்சியாளர்களோடு கருத்து வேறுபாடு கொண்டால் உண்மையிலேயே நீங்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் நம்பிக்கைக் கொண்டவர்களாயின் அல்லாஹ் மற்றும் ரஸூலிடம் கொண்டு செல்லுங்கள். இதுவே சிறந்த வழிமுறையாகும். மிக நல்ல முடிவைத் தரக்கூடியதாகவும் இருக்கும்.

இந்த வசனத்தில் ஒரு உண்மையான நம்பிக்கையாளரைப் பற்றிய அடிப்படையான விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது அவர் தன்னுடைய கட்டுப்படுதல் என்ற பண்பை அது அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதாக இருந்தாலும் சரி, ரஸூலுக்கு கட்டுப்படுவதாக இருந்தாலும் சரி அல்லது ஆட்சியாளர்களுக்கு கட்டுப்படுவதாக இருந்தாலும் சரி வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அரசாங்கம் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் வெளிப்படையான கட்டளைக்கு மாற்றமாக ஏதாவததொரு கட்டளையிட்டால் அந்த நிலைமையில் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கட்டளையே முதன்மையானதாகும். மார்க்க விவகாரங்களில் ஆட்சியாளர்களின் தலையீடு இல்லையென்றால் அது முஸ்லிம்களின் ஆட்சியோ அல்லது முஸ்லிம் அல்லாதவர்களின் ஆட்சியோ அவர்களுக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

திருக்குர்ஆனின் கட்டளை இதுவாகும். أَطِيعُوا۟ ٱللَّهَ وَأَطِيعُوا۟ ٱلرَّسُولَ وَأُو۟لِى ٱلْأَمْرِ مِنكُمْ ۖ ஆட்சியாளர்களுக்கு கட்டுப்பட வேண்டும் என்று வெளிப்படையாக கூறப்பட்ட பிறகும் எவராவது அரசாங்கம் مِنكُمْ ۖ அதாவது உங்களது ஆட்சியாளர்கள் என்பது இதற்குக் பொருந்தாது என்று கூறினால் அது அவருடைய தவறாகும். அரசாங்கம் எந்த விஷயத்தை ஷரீஅத்திற்கு இணக்கமாக கூறுகிறதோ அது مِنكُمْ ۖ அதாவது

உங்களது ஆட்சியாளர்கள் என்பதில் அடங்கும். எவர் நம்மை எதிர்ப்பதில்லையோ அவர் நம்மைச் சார்ந்தவர்களாவர். கூறினார்கள். திருக்குர்ஆனில் மிகத் தெளிவாக சைகை மூலமாக அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று இதில் இவ்வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆக, இந்த காலத்தில் நெறி நீதி தீர்ப்பவராக வந்திருப்பவர் இறைவனுக்கும் அவனது தூதருக்கும் மாறுசெய்யாத வகையிலுள்ள கட்டளைகளைத் தவிர உலகக் கட்டளைகளில் ஒரு நம்பிக்கையாரின் பணி நாட்டின் சட்ட திட்டத்திற்கு முழுமையாக பேணி நடக்க வேண்டும் என்று தெளிவாக கூறிவிட்டார்கள். இந்த அழகிய போதனையை இப்போது முஸ்லிம்கள், அரசாங்கத்தோடு சண்டையிடக் கூடாது என்பதை ஏற்று நடந்தால் பல நாடுகளில் பரவியுள்ள குழப்பங்களில் பெரிய அளவில் அமைதி நிலைபெற முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை நான் உங்கள் முன்னால் வைப்பேன். அது கட்டுப்படுதலின் தரம், கட்டுப்படுதலின் முக்கியத்துவம், மேலும் கட்டுப்படாமையால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள், மேலும் இஸ்லாம் பரவுவதில் கட்டுப்படுதலின் பங்கு ஆகியவை அதில் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த காலத்தில் அஹ்மதி தான் கட்டுப்படுதலின் உண்மையான தோற்றத்தை வெளிப்படுத்த முடியும். மேலும் முஸ்லிம்களின் கண்ணியத்தை எவ்வாறு நிலைநாட்ட முடியும் என்பதையும் உலகிற்கு காட்ட முடியும். எந்நிலையிலும் நமது செயல் முன்மாதிரி முதலில் இருக்க வேண்டும். நமது கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்துவது முதலில் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள். முதல் விஷயம் நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ்வுக்கும், அவனது ரஸூலுக்கும், மேலும் ஊலுல் அம்ர் அதாவது உங்களுடைய தலைவர்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இதில் அரசாங்க அமைப்புகளும் அடங்கும். மேலும் ஜமாஅத் அமைப்பும் அடங்கும். மேலும் கிலாஃபத்திற்கு கட்டுப்படுவது இவை இரண்டையும் விட உயர்வானதாகும். ஏனென்றால் கிலாஃபத் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கட்டளைகளை நிலைநாட்டுகின்றது. மேலும் ஜமாஅத் அமைப்பு கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டதாகும். சில நேரங்களில் ஜமாஅத் அமைப்பை வழிநடத்தக் கூடியவர்களுக்கும், ஜமாஅத் மக்களுக்கும் இடையில் ஏதாவது கருத்து வேறுபாடு அல்லது பிரச்சனை ஏற்பட்டால் காலத்தின் கலீஃபா அந்த பிரச்சனையை சரி செய்கின்றார். இது அவருடைய கடமையில் அடங்கும். மேலும் கிலாஃபத்தின் அழகுமாகும். கிலாஃபத்திற்கு கட்டுப்படுவது அரசாங்கத்தை விட உயர்வானது என்று நான் கூறியதிலிருந்து எந்தவொரு தவறான எண்ணங்களும் ஏற்படக்கூடாது. காலத்தின் கலீஃபா நாட்டின் சட்டதிட்டத்திதை அதிகமாக கடைபிடிக்கக் கூடியவரும், கடைபிடிக்கச் செய்பவரும் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

وَأُوْلِي ٱلْأَمْرِ ஊலுல் அமர் என்பதன் பொருள் உடல் பௌதீகமான ரீதியில் அரசாங்கத்தையும், ஆன்மீகமான முறையில் காலத்தின் இமாமையும் குறிக்கும். எனவே, அரசாங்கத்தின் உலக அமைப்புக்குள்ளே ஒரு ஆன்மீக அமைப்பும் செயல்பட முடியும். செயல்படுகின்றது. நாம் இந்த ஆன்மீக அமைப்பின் பகுதியாக இருப்பது நமது நற்பேராகும். மேலும் காலத்தின் இமாமினால் நிலைநாட்டப்பட்ட அமைப்பை தொடரச் செய்வதற்கே அல்லாஹ் கிலாஃபத் அமைப்பை தொடரச் செய்தான். அது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் ஆட்சியை உள்ளத்தில் நிலைநாட்ட முயற்சி செய்கின்றது. மேலும் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடிய நிலையில் அல்லாஹ் மற்றும் ரஸூலின் கட்டளைக்கேற்ப தீர்ப்பு வழங்குகின்றது. கிலாஃபத் அமைப்பு நம்மிடம் தொடரச் செய்வதும் இறைவன் நம்மீது செய்துள்ள கருணையாகும். இல்லையென்றால் அல்லாஹ் மற்றும் ரஸூலின் பக்கம் திரும்புவது தொடர்பாக பல்வேறு பிரிவைச் சார்ந்தவர்கள் மற்றும் ஃபுகஹாக்களின் விளக்கங்கள் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால் அது விவகாரங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பகரமாக

பிரச்சனையை மேலும் அதிகமாக்கி விடுகின்றது. இதே போன்று அரசாங்கத்துடன் நடந்து கொள்ள வேண்டிய முறையிலும் அவர்களுடைய பார்வை பல்வேறு பிரச்சனைகளை உருவாக்க இயலும். ஆக, ஒரு தீர்ப்பு கிலாஃத்திற்கு கீழ் இருந்தவாறு தான் பெற முடியும். மேலும் இதற்காக ஒரு அஹ்மதி எவ்வளவு நன்றி செலுத்தினாலும் அது போதுமானதல்ல. கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதின் மூலமாகவே நாம் நமது நன்றியை வெளிப்படுத்த முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் இதையும் கூறினார்கள். அதாவது இது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாகும். அதாவது எப்போது உண்மையான உள்ளத்துடன் கட்டுப்படுவோமோ அப்போது உள்ளத்தில் ஒளியும், ஆன்மாவில் புத்துணர்ச்சியும் ஏற்படுகின்றது. மேலும் அல்லாஹ்வுக்கும் அவனது ரஸுலுக்கும் கட்டுப்பட்டு நடந்த பிறகும் உள்ளத்தில் எந்தவொரு ஒளியும் ஏற்படவில்லை என்றால் அன்னார் கூறினார்கள் அதனால் எந்தப் பயனும் கிடையாது. அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதனால் அமைதியும், நிம்மதியும் ஏற்படலாம். ஆனால் ஆன்மீக ஒளியும், புத்துணர்ச்சியும் ஆன்மீக அமைப்பிற்கு கட்டுப்படுவதில் தான் கிடைக்கின்றது. மேலும் தன்னுடைய ஆன்மீக தரத்தை உயர்த்துவதற்கு அன்னார் இந்த வழிமுறையைக் கூறினார்கள். அதாவது எந்த அளவு கட்டுப்படுதலின் தேவை இருக்கின்றதோ அந்த அளவு முயற்சிகளின் தேவை இருக்காது. பிறகு கட்டுப்படுதலின் தரத்தை அடைவதற்கு அன்னார் ஒரு விஷயத்தை கூறுகிறார்கள். அதாவது கட்டுப்படுதலில் தன்னுடைய நப்ஸை மாய்த்து விடுவது அவசியாமாகும். தன்னுடைய ஆணவத்தையும், ஆகங்காரத்தை விட்டுவிட வேண்டும். மேலும் தன்னுடைய ஆசைகளை இறைவன் மற்றும் அவனது ரஸுல் (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் கட்டுப்படுதலின் தரத்தை பெற முடியும். அவ்வாறின்றி கட்டுப்படுவதென்பது நடக்க இயலாது. அன்னார் கூறினார்கள்.

பெரும் பெரும் ஏகத்துவவாதிகளின் உள்ளங்களிலும் சிலை உருவாக முடியும். அவர் ஒரு இறைவனை வணங்கக் கூடியவர் என்ற வாதம் செய்தாலும் சரியே. ஆனால் சுயநலம், தற்பெருமை ஆகியவை அவர்களின் உள்ளங்களில் இருக்கின்றது. அது ஒரு சமயத்தில் பெரிய பெரிய விஷயங்கள் ஒரு புறம் இருக்கட்டும். அது அவனை சிறிய விஷயத்தில் கூட கட்டுப்படுவதிலிருந்து வெளியேற்றி விடும். அன்னார் கூறினார்கள். சஹாபாக்கள் உண்மையான கட்டுப்படுதலுக்குப் பிறகே தன்னுடைய இறை வணக்கங்களில் எப்படிப்பட்ட உயர் தரத்தை அடைந்தார்கள் என்பது இன்றும் நமக்கு அது ஒரு முன்மாதிரியாகும். ஒரு ஹதீஸில் வருகின்றது. கட்டுப்படுவது எவ்வாரு இருக்க வேண்டுமென்றால் அது உங்களுக்கு அமீராக ஒரு ஆப்ரிக்க அடிமை நியமிக்கப்பட்டாலும் அவருக்கு நீங்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மேலும் இதையும் கூறினார்கள். அதாவது உளர்ந்த திராட்சையைப் போன்ற ஒருவர் உங்களுக்கு அமீராக நியமிக்கப்பட்டாலும் அவருக்கு கட்டுப்பட்டு நடங்கள். அதாவது அறிவில் அவருக்கு குறை இருந்தாலும் அவருக்கு கட்டுப்பட்டு நடங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சமுதாயத்தின் முன்னேற்றத்தை கட்டுப்படுதலோடு ஒன்றிணைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்.

எப்போது வரை ஒரு சமுதாயம் கட்டுப்படுதலை பேணவில்லையோ மேலும் அந்த சமுதயாத்தில் ஒறுமைப்பாடு ஊதப்படவில்லையோ அப்போது வரை ஒரு சமுதாயமும் சமுதாயம் என்று அழைக்கப்பட முடியாது. ஆக, இந்த விஷயத்தை பேணுவதே முன்னேற்றத்திற்கான ரகசியமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இதையே கூறினார்கள்.

முன்னேற்றம் என்பது ஜமாஅத்துடன் இணைந்திருப்பது, இமாமின் கூற்றை கேட்பது மற்றும் கட்டுப்படுவதினால் தான் கிடைக்கின்றது. அவ்வாறில்லையென்றால் முன்னேற்றம் கிடைக்காது. இன்று இந்த உண்மையை முஸ்லிம்கள் புரிந்து கொண்டால் எப்படிப்பட்ட ஒரு சக்தியாக அது ஆகிவிடும் என்றால் உலகத்திலுள்ள எந்த சக்தியாலும் அவர்களிடம் போட்டி போட முடியாது. ஆனால் அஹ்மதி

என்று கூறக்கூடிய நாமும் முழுமையான கட்டுப்படுதலின் தரத்தை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆன்மீக ஜமாஅத்தில் கட்டுப்படுதலை அல்லாஹ் முடிவைப் பொறுத்தவரையில் சிறந்தது என்று கூறியுள்ளான். கட்டுப்பட்டு நடந்தால் சிறந்த விளைவு கிடைக்கத் தான் செய்யும். இதன் மூலமாக பல மாற்றங்கள் நிகழும். ஆனால் உலக அமைப்புகளில் நாம் பார்க்கின்றோம். கட்டுப்படுதலின் ஆன்மா எப்படிப்பட்ட வேலைகளை காண்பிக்கிறது.

வரலாற்றில் நெப்போலியன் பற்றி நாம் பார்க்கின்றோம். பிரான்ஸ் முன்னேற்றப் பாதையிலிருந்து வீழ்ச்சியின் பக்கம் சென்று கொண்டிருந்த போது அதை அவர் பாதுகாத்தார். அந்த நேரத்தில் நாட்டின் நிலைமை மிகவும் தீயதாக இருந்தது. நெப்போலியன் மக்களிடம், எப்போது வரை உங்களிடம் பிரிவினை இருக்குமோ அப்போது வரை நீங்கள் வெற்றி பெற முடியாது. மேலும் நீங்கள் கட்டுப்படுதல் மற்றும் கீழ்ப்படிதலின் தன்மையை உங்களிடம் உருவாக்கிக் கொண்டால் நீங்கள் வெற்றி பெற்று விடுவீர்கள். முன்னேற்றத்தைப் பெறுவீர்கள். உங்களுடைய நோக்கத்தை பெறுவீர்கள் என்று கூறினார். நாட்டின் நன்மையை கருதக் கூடியவர்கள் இவரது பேச்சைக் கேட்டார்கள். மேலும் அவரது அருகில் ஒன்று சேர ஆரம்பித்தார்கள். மேலும் அவரையே தன்னுடைய தலைவராகவும் ஆக்கிக் கொண்டார்கள். மேலும் கட்டுப்படுதல் மற்றும் கீழ்ப்படிதலின் உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டினார்கள். அவர்களிடம் அவர் எப்படிப்பட்ட ஆன்மாவை உருவாக்கினார் என்றால், ஒரு பெரிய போருக்குப் பிறகு நெப்போலின் தோல்வி அடைந்தார். மேலும் இத்தாலியின் ஒரு தீபத்தில் அவர் கைது செய்யப்பட்டார். பிரான்ஸில் ஒரு புதிய அரசும் நிலைநாட்டப்பட்டு விட்டது. நாட்டின் அரசர் பாதிரிமார்களை அழைத்து அவர்கள் மூலமாக ஜனரல் மற்றும் சிப்பாய்களிடம் பைபிளின் மீது கையை வைத்தவாறு இவ்வாறு சத்தியம் செய்யக் கூறினார். நெப்போலியன் மக்களிடம் கட்டுப்படுதலுக்கான எப்படிப்பட்ட ஆன்மாவை ஏற்படுத்தி இருந்தார் என்றால் அவர் திரும்பி வந்தால் மக்கள் அவருடன் ஒன்று சேர்ந்து விடுவார் என்பது நாட்டின் அரசருக்கு நான்றாகத் தெரியும். நெப்போலியன் விடுதலையாகி பிரான்ஸ் வந்தார். மேலும் பாமர மக்களை ஒன்று சேர்த்தார். அவர்கள் திறமைபெற்ற போர் வீரர்களாகவும் இருக்கவில்லை. மேலும் அவர்களிடம் ஆயுதங்களும் போதுமான அளவு இருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் நாட்டின் அரசருக்கு இதுபற்றி தெரிய வந்த போது அவர்களை அழித்து விடும்படி ஜெனரலுடன் ஒரு படையை அனுப்பி வைத்தார். ஆனால் அவர்களுடைய காதில் உங்களுடைய அரசர் நெப்போலியன் உங்களை அழைக்கிறார் என்ற நெப்போலியனுடைய இந்த ஓசையை கேட்டதும் போர் வீரர்களும், ஜெனரலும் நாட்டின் அரசரிம் செய்த உறுதிமொழியை மறந்து விட்டு கட்டுப்படுவது தொடர்பாக அவர்கள் முதலில் செய்த உறுதிமொழியில் நிலைத்து நிற்கலானார்கள். எவ்வாறிருப்பினும் பிரான்ஸில் ஏற்பட்ட கடுமையான பிரிவினைக்குப் பிறகும் அவர்களிடம் கட்டுப்படுதலுக்கான ஆன்மாவை உருவாக்கியது நெப்போலியனின் முயற்சியாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் ஒரு எடுத்துக் காட்டை எடுத்துக் கூறியவாறு கூறுகிறார்கள். நெப்போலியன் மற்றும் இதர உலகத் தலைவர்களிடம் உண்மையான மார்க்கத்துடன் இருக்கக்கூடிய இறைவனின் அந்த உதவி இருப்பதில்லை. ஆனால் அவ்வாறிருந்தும் அவர்கள் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அன்னார் கூறினார்கள். أَطِيعُوا۟ ٱللَّهَ وَأَطِيعُوا۟ ٱلرَّسُولَ وَأُو۟لِى ٱلْأَمْرِ مِنكُمْ ۖ எப்படிப்பட்டதென்றால் எப்போது வரை ஒரு சமுதாயம் அதன்படி நடக்கவில்லையோ அது உண்மையான மார்க்கமாக இருந்தாலும் சரி அவர்களால் ஒரு போதும் வெற்றி பெற முடியாது.

ஒரு சமுதாயம் உருவாவதற்கு ஒற்றுமையும், கட்டுப்படுதலும் அவசியம் என்று கூறிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய விஷயத்தை நாம் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். அவ்வாறில்லையென்றால் வீழ்ச்சியே ஏற்படும். இதுபற்றி திருக்குர்ஆன் மிகத் தெளிவாக கூறுகின்றது.

وَٱعْتَصِمُوا۟ بِحَبْلِ ٱللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا۟ ۚ وَٱذْكُرُوا۟ نِعْمَتَ ٱللَّهِ
عَلَيْكُمْ إِذْ كُنتُمْ أَعْدَآءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ فَأَصْبَحْتُم بِنِعْمَتِهِۦٓ إِخْوَٰنًا
وَكُنتُمْ عَلَىٰ شَفَا حُفْرَةٍ مِّنَ ٱلنَّارِ فَأَنقَذَكُم مِّنْهَا ۗ كَذَٰلِكَ يُبَيِّنُ ٱللَّهُ
لَكُمْ ءَايَٰتِهِۦ لَعَلَّكُمْ تَهْتَدُونَ

நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் பிரிந்து போய் விடாதீர்கள். உங்கள் மீது (செய்து)ள்ள அல்லாஹ்வின் ஆருளை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் (ஒருவருக்கொருவர்) எதிரிகளாயிருந்தீர்கள். பின்னர் அவன் உங்கள் உள்ளங்களில் நட்பை உண்டாக்கினான். எனவே நீங்கள் அவனுடைய அருளினால் உடன்பிறப்பு போல் ஆகிவிட்டீர்கள். நீங்கள் ஒரு நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் இருந்தீர்கள். பின்னர் அவன் உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். இவ்வாறே அல்லாஹ் உங்களுக்குத் தன் வசனங்களை நீங்கள் நேர்வழியினைப் பெறும் பொருட்டு விளக்குகின்றான்.

ஆனால் அல்லாஹ்வின் இந்த வெளிப்படையான கட்டளைக்குப் பிறகும் பிரிவினையின் உச்சகட்டத்தை எட்டியிருப்பது முஸ்லிம்கள் துர்பாக்கிய நிலையாகும். அவர்கள் மீது செய்த அருள்களை அவர்கள் மறந்து விட்டார்கள். வீழ்ச்சியை அவர்கள் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்திலிருந்து இதுவே முஸ்லிம்களின் நிலையாக இருந்தது. ஆனால் தற்போது இது இன்னும் அதிகமாகிவிட்டது. ஆனால் அவர்கள் புரிந்து கொள்வதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். கருத்து வேறுபாடுகளின் வழியை விட்டுவிட்டு ஒருவருக்கு கட்டுப்பட்டு நடங்கள். அதாவது காலத்தின் இமாமிற்கு கட்டுப்பட்டு நடங்கள். ஏனென்றால் இந்த காலத்தில் அல்லாஹ் ஒருவரை அனுப்பியுள்ளான். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே ஆவார்கள். மேலும் கூறினார்கள். பிறகு எந்த அளவிற்கு அருள்கள் கிடைக்கின்றது என்பதைப் பாருங்கள். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. எவர்களிடம் ஒற்றுமை இருக்குமோ அவர்களுக்கு தான் இறைவன் கிடைக்கின்றான். மேலும் இறைவனைப் பற்றிய ஞானமும் அவர்களுக்கு தான் கிடைக்கின்றது.

நாம் பைஅத் செய்து விட்டோம் என்பதற்காக மட்டும் நாம் திருப்தி அடைந்து விடக்கூடாது. பைஅத்தின் தரத்தை அடைவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூ பக்கர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் சில சஹாபாக்களை எடுத்துக் காட்டாக கூறியவாறு, இவர்கள் மேலும் உலக மற்றும் அரசியல் ஞானத்தைப் பெற்றிருந்தார்கள். நேரம் வந்த போது அவர்களுடைய இந்த சிறப்பம்சமும் வெளிப்பட்டது. மேலும் சிறப்பாக அவர்கள் ஆட்சி செய்தார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களுடைய காலத்தில் அவர்களுக்கு எதுவுமே தெரியாது என்பது போல் இருந்தது. முழுமையாக கீழ்ப்படிந்து, கட்டுப்பட்டு நடப்பது மேலும் கட்டளைக்கேற்ப செயல்படுவது தான் அவர்களுடைய பணியாகும். மேலும் தன்னுடைய அனைத்து அறிவையும், வழிகளையும் அவர்கள் ஒன்றுமற்றதாக கருதினார்கள். ஆனால் ஒரு காலத்தில் சஹாபாக்கள் எப்படி உலகை ஆட்சி செய்தார்கள் என்பதை உலகம் பார்த்தது. இந்த தர்பிய்யத்தின் விளைவாகத் தான் கிலாஃபத்தே ராஷிதா காலகட்டத்தில் ஒற்றுமையின் உயர் முன்மாதிரியை அவர்கள் காண்பித்தார்கள்.

வரலாற்றில் ஒரு சம்பவம் வருகின்றது. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய ஒரு கடிதம் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கிடைத்தது.

அதில் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடைய மரண செய்தி இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்குப் பதிலாக ஹஸ்ரத் அபு உபைதா அவர்களை படைகளுக்கு அமீராக நியமித்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் இந்த தருணத்தில் கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டவாறு சிறந்த முன்மாதிரியை நிலைநாட்டியவாறு கூறினார்கள், மக்களே! உங்கள் மீது சமுதாயத்தின் அமீன் அமீராக நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஹஸ்ரத் அபு உபைதா அவர்களைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் அமீன் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபு உபைதா (ரலி) அவர்கள் இதற்குப் பதிலாக, நான் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டேன். அதாவது காலித் பின் வலீத் இறைவனுடைய வாளில் ஒரு வாள் ஆவார். மேலும் கோத்திரத்தின் மிகச் சிறந்த இளைஞராவார் என்று கூறினார்கள்.

ஆக, இது தான் மன மகிழ்ச்சியோடு காலத்தின் கலீஃபாவின் தீர்ப்பை ஏற்பதாகும். இன்றும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து விடுகின்றன. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் கட்டுப்படுதலுக்கான உணர்வு இருக்கின்றது. ஆனால் சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் எப்போதாவது பொறுப்பிலிருந்து அகற்றி விட்டால், ஏன் அகற்றி விட்டீர்கள் ? எதற்காக அகற்றி விட்டீர்கள் ? எங்களிடம் என்ன குறை இருந்தது ? என்று கேள்வி எழுப்புகின்றனர். வரலாறு நமக்கு கற்றுக் கொடுக்கக்கூடிய பாடத்தை நாம் நம் முன்னால் வைத்தால் ஒருபோதும் இப்படிப்பட்ட கேள்விகள் எழாது. ஆக, ஒவ்வொரு அஹ்மதியின் மிகப் பெரிய பொறுப்பு என்னவென்றால் அவர் أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الْأَمْرِ مِنكُمْ என்பதற்கு ஏற்றவாறு எப்படிப்பட்ட முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்றால் உலகத்தின் கவனத்தை தங்கள் பக்கம் திரும்பக் கூடியவராக இருக்க வேண்டும். இதன் வழிமுறையின் மூலமாகத் தான் நாம் உலகத்தின் உள்ளத்தை வெற்றி பெற முடியும். இதன் மூலமாகத் தான் நாம் உலகத்தை அல்லாஹ் மற்றும் பெருமானார் (ஸல்) அவர்களின் காலடியில் கொண்டு வர இயலும். இதன் மூலமாகத் தான் நாம் உலகத்தை வழிநடத்த முடியும். மேலும் உலகத்திலிருந்து குழப்பத்தை அகற்ற முடியும். ஏனென்றால் நான் கூறியது போன்று நம்மிடம் அல்லாஹ்வின் கட்டளை திருக்குர்ஆன் வடிவத்தில் இருக்கின்றது. அது நாம் கட்டுப்படுவதற்கும், அமல் செய்வதற்கும் உரியதாக இருக்கின்றது. நம்மிடம் பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய நடைமுறை இருக்கின்றது. அதற்கு கட்டுப்படுவது நம்மீது கடமையாக்கப்பட்டுள்ளது. நம்மிடைய وَأُولِي الْأَمْرِ அதாவது ஆட்சியாளர்களுக்கு கட்டுப்படுவதற்குரிய ஆன்மீக அமைப்பும் இருக்கின்றது. அது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களின் கட்டளைகளின் பக்கம் நமக்கு கவனமூட்டிக் கொண்டிருக்கிறது. ஆக, நம்மிடம் மற்றவர்களை விட நம்மை வித்தியாசப்படுத்திக் காட்டக் கூடிய எவ்வித குறையும் இல்லை. அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நற்பாக்கியத்தை தந்தருள்வானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் வைத்திருந்த எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நாம் எப்போதும் அதை நிறைவேற்றுபவர்களாக ஆகுவோமாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 5.12.14
Summarized by Nazarath Nashr-O-Isha'ath
Tamil Translation : Muallim. A.Khaleel Ahmad
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516